7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2023), மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2023)[@] *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் தேவைகளுக்காக சட்டமன்றத்தில் இயற்றப்படுகின்ற சட்டங்களை விரிவாக ஆய்வு செய்வதும், காலாவதியான சட்டங்களை இரத்து செய்வதற்காக விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதும் இந்தச் சட்டமன்றத்தினுடைய மாண்புடன்கூடிய இதயபூர்வமான நடவடிக்கையாக இருக்கும் ஒரு மிக முக்கியமான செயல் ஆகும். ஆனால், கடந்த காலங்களில் அப்படி ஒரு செயல் இந்த அவையில் நடைபெறவேயில்லை. அப்போது 40 சட்டங்கள், 50 சட்டங்கள் ஒரே நாளில் விவாதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்போதுகூட தேவையில்லாத 169 சட்டங்களை ஒரே நாளில் இரத்து செய்வதற்கான சட்டமுன்வடிவைக் கொண்டு வந்துள்ளீர்கள். நானும் படித்துப்*

[@]***12–1–2023** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

[திரு. தி. வேல்முருகன்] [2023 ஜனவரி 13

பார்த்தேன். ஆனால், குறைந்தபட்சம் ஓர் ஆய்விற்கான நேரத்தை ஒதுக்கி, ஆய்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைச் செயலகத்திற்கும் வைத்து, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்லிவிட்டீர்கள் இல்லையா? எல்லோருடைய கவனத்திற்கும் இது வந்துவிட்டது. (குறுக்கீடு) இந்தச் சட்டமுன்வடிவைக் குறித்து மட்டும் பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்டமுன்வடிவை குறித்து மட்டும் பேசுகிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட மசோதாவில் தனி அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் பதவிகளைக் குறித்து, முன்மொழிந்திருக்கிறார். இது வரவேற்கக்கூடிய சட்டம். இதை வரவேற்கிறேன், நீட்டியுங்கள்.

அதேநேரத்தில் நான் வைக்கிற வேண்டுகோள் என்பது, இப்போது எல்லா இடங்களிலும் உள்ள விவசாயிகள் கடன்களிலும், கஷ்டத்திலும், நஷ்டத்திலும் இருக்கிறார்கள். ஆதலால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு நியாயமான, கட்டுப்படியாகக்கூடிய விலையை நிர்ணயம் செய்வதற்கான சட்டம் ஒன்றை மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையோடு, இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று, அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் சொன்னதற்கு நீங்கள் ஏதாவது பதில் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். இல்லையென்றால்

2023 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

அமருங்கள். இந்தச் சட்டமுன்வடிவிற்கு தொடர்பு இல்லாத கேள்விதான். எனவே, மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. இல்லை. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இரண்டாவதாக கேட்ட கேள்வி, அதற்கும், இதற்கும் தொடர்பு இல்லை. நீங்கள் புதுச் சட்டம் கேட்டிருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். அனைவரும் உட்காருங்கள். நான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12–35

(ஆ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2023), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2023)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

@12–1–2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.